பொறுப்பு அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தலைமையில்

# உதகை சட்டமன்றத் தொகுதி கழக நிர்வாகிகள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் அறிவிப்பு!



நீலகிரி, பிப். 13-

நீலகிரி மாவட்டம், உதகை சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட தி.மு.க. நிர்வாகிகள் கூட்டம் மாவட்டப் பொறுப்பு அமைச்சர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் மாவட்டக் கழக அலுவலகம், உதகை கலைஞர் அறிவாலயத்தில் இன்று (13.2.2025 வியாழக்கிழமை) மதியம் 2 மணியளவில் அரசு கொறடா கா. ராமச்சந்திரன் முன்னிலையில் நடைபெற உள்ளது.

மாவட்டக் கழகச் செயலாளர் பா.மு.முபாரக் வரவேற்புரையாற்ற உள்ளார்.

கூட்டத்தில், கழக வளர்ச்சிப் பணிகள் குறித்து ஆலோசிக்கப்பட உள்ளது.

மேற்படி கூட்டத்தில் உதகை சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழுபொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், நகராட்சி, பேரூராட்சி தலைவர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாமல் கலந்து சிறப்பிக்க வேண்டுகிறேன்.

இவ்வா மாவட்டக் கழகச் செயலாளர் ப.மு.முபாரக் தெரிவித்துள்ளார்.

மாதவரம் தெற்குப் பகுதி - 28வது வட்டத்தில்

# மா.பொ.வேதா 43ஆம் ஆண்டு நினைவு நாள் அமைதிப் பேரணி!

## மாதவரம் எஸ்.சுதர்சனம் தலைமையில்! டி.ராமகிருஷ்ணன் – மிசா.பா.மதிவாணன் – கே.பி.சங்கர் பங்கேற்பு!

சென்னை, பிப். 13-

மாதவரம் தெற்கு பகுதி தி.மு.க. மற்றும் தியாக தீபம் மா.பொ. வேதா நினைவு மன்றம் சார்பில் தியாக தீபம் மா.பொ. வேதா அவர்களின் 43 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அமைதிப் பேரணி 8.2.2025 சனிக்கிழமை அன்று காலை 8 மணி அளவில் அண்ணா சிலை, கணகன் சத்திரம் ஜி.என்.டி.ரோட்டில் இருந்து புறப்பட்டு அவரது நினை விடத்தில் மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்ச்சிக்கு சென்னை வடகிழக்கு மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமை வகித்தார்.

சென்னை வடகிழக்கு மாவட்ட கழக துணைச் செயலாளர் டி.ராம கிருஷ்ணன், மிசா.பா. மதிவாணன், கே.பி.சங்கர் எம்.எல்.ஏ., எஸ்.நந்தகோபால் எம்.சி., ஜி.துக்காரம், புழல் எம்.நாராயணன், எம். பிரேம்குமார் ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர்.

இந்நிகழ்ச்சிக்கு வி.இராமநாதன், குறிஞ்சி எஸ். கணேசன், மு. ராஜேந்திரன், எம்.அறிவழகி, எம். ஆனந்தன், தி.மு.தனியரசு எம்.சி., ஏ.வி.ஆறுமுகம் எம்.சி., வை.மா.அருள்தாசன், ஜி.தயாளன், மீ.வே. கர்ணாகரன், ஜி. ராஜேந்திரன், ச.அற்புதராஜ் வீ.கண்ணதாசன், வீ.கவி கணேசன், என்.பரந்தாமன், ஜெ. ஜெய் மதன், இரா.முருகேசன், டி.ஏ.ராஜி, பி.சாந்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் மாமன்ற உறுப்பினர்கள்: மு. சிவகுமார், பி. தமிழரசன், கே.பி.சொக்கலிங்கம், டி. சி.வி.ராஜகுமாரி, உமா சரவணன், சரண்யா கலைவாணன், சுசிலா ராஜா, பானுமதி சந்தர், நந்தினி சண்முகம், ஜி. ராஜேந்திரன், கே.காசிநாதன், ஜெ. ஆஸ்னா மெர்ஷியா, ஏ.சந்திரன், எஸ்.கனிமொழி சுரேஷ், டி.கார்த்திகேயன், ஜி.திருமலை துரைசாமி, எம்.குணசுந்தரி குட்டி மோகன்

28 வது வட்ட கழக நிர்வாகிகள்: சி.கே.கோபால், எஸ்.எம்.பன்னீர்செல்வம், டி.ஆர்.செங்குட்டுவன், எஸ்.எம்.மோகன், டி.ஆர். ரவிந்திரகுமார், ஏ.சசிகுமார், யு.காந்திமதி உதய சூரியன், எஸ்.நிசார் அகமத், ஏ.ஜெயசெல்வி அசோக்குமார், கே.பி. உசேந்திரன், ஏ.முனுசாமி, சி.கே.ஜி.தர்மராஜ், டி.சந்திரன், மா.பொ.வே.ராஜா, டி.மதன், எஸ்.கரண்ராஜ், பி.காசிராஜன், ஆசைத் தம்பி,

பகுதி கழக நிர்வாகிகள்: புத்தகம் இ.ஏழுமலை, வி.எஸ்.ஆர்.ஜெயக்குமார், இ.மோகன், ஆ.விஜய லட்சுமி ஆனந்தன்,மாவட்ட பிரதிநிதிகள்: எம்.பி.நடராஜன், ஆர்.ஞானசேகர், ஏ. சந்திரன், டி.எஸ்.இளங்கோவன், கே.ரமணன், ச.மணி கண்டன், எம்.செல்வம், இ.ராஜேஷ்குமார், எஸ்.சண்முகம், ஜி.தேவி கௌதமன், கே. பாண்டியன், கோட்டை மோசஸ், வடக்கு பகுதிக் கழக நிர்வாகிகள் ஏ.திராவிட வீரன், க.சிவசங்கரன், ஆ.ராஜேந்திரன், எஸ். கௌரி, ஆர்.முரளி, மாவட்ட பிரதிநிதிகள் பி.தரணி, கே.காசிநாதன், பி.நிர்மல் குமார், கு.செல்வம், நா.மோகன் குமார், வி.கார்த்திகேயன், பி.சந்திரன், கே.ஜிம் ராஜா, நிகழ்ச்சி தூண் அமைப்பு நிர்வாகிகள்: டி.ராம கிருஷ்ணன், எஸ்.எம்.மோகன், எஸ்.எம்.பன்னீர்செல்வம், கே.அன்பு உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

மாநில நிர்வாகிகள் – மாவட்ட – மாநகர அமைப்பாளர்கள் பங்கேற்கும்

# கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு கூட்டம்!

## அணிச் செயலாளர் டாக்டர் அ. சுபேர்கான் அறிவிப்பு!

சென்னை, பிப்.13-

தி.மு.கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாநிலச் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தி.மு. கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் ஆலோசனைக்கூட்டம் வரும் 17.02 .2025 திங்கள் அன்று நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில். நிர்வாக வசதிக்காக வேண்டி இக்கூட்டம் வரும் 18.02.2025 செவ்வாய்க்கிழமைக்கு மாற்றப்பட்டுள்ளது.

மேலும் அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கில் காலை10:00 மணியளவில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட மாநகர அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: சிறுபான்மையினரின் பாதுகாவலர் கழகத் தலைவர்; தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழாக் கொண்டாட்டம் மற்றும் கழக ஆக்கப் பணிகள் தொடர்பாக.

இவ்வாறு கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மு.மலையாளம்

**பிப்ரவரி 13 (2000)**



கழகக் கொள்கையில் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் இணைந்து பணியாற்றியவர்.

திருச்சி, மணப்பாறை நகரக் கழகச் செயலாளர், மாவட்ட பிரதிநிதி என பொறுப்புகள் வகித்தவர்.

தியாகேசர் பஞ்சாலை தொழிலாளர் முன்னேற்றச் சங்ககத் தலைவராக பொறுப்பு வகித்து, தொழிலாளர் நலத்திற்கென பாடுபட்டவர்.

மணப்பாறை நகர்மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நாமக்கல் இரா. அருணகிரி

**பிப்ரவரி 13 (2005)**




நாமக்கல் நகர இளைஞர் அணி அமைப்பாளராகவும் பின்னர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளராக இரு முறை பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

நாமக்கல் நகராட்சி மன்ற உறுப்பினராகவும், நாமக்கல் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் தலைவராகவும், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி அமைப்புக்குழு துணைத் தலைவராகவும், மாநில கூட்டுறவு இணையத்தின் இயக்குநராகவும் பணியாற்றியவர்.

சட்டநகல் எரிப்பு, ஈழத் தமிழர் பிரச்சினை உள்ளிட்ட கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

பிப்ரவரி
**13**



# முதலாம் ஆண்டு
## நினைவஞ்சலி

அண்ணா அறிவாலயம்

# N.ஜெயக்குமார்

(துணை மேலாளர், அண்ணா அறிவாலயம்)

**11.09.1950 - 13.02.2024**

இப்படிக்கு,
**Dr.அருண் ஜெயக்குமார்** M.D.S.
துணைச் செயலாளர்,
மாநில மருத்துவ அணி.